## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 61. ஸ்ரீமதி.பிளாபாய் தேவி

அயோத்யாவில் வாழ்ந்தவர் பிளாபாய்.
இவரது பெற்றோர் மிகவும் ஸ்ரத்தையான ஆன்மீக அன்பர்கள். ஸ்ரீராம பக்தியில் திளைத்தவர்கள். அன்பும் மரியாதையும் அனைவருக்கும் பகிர்ந்தவர்கள்.இவர்களின் கடைசிக் குழந்தை தான் பிளாபாய்.இவருக்கு இரண்டு மூத்த சஹோதரர்கள். இருவரும் முரடர்கள், நாஸ்திகர்கள்.

தன் பெற்றோரின் ஆன்மீகத்தை வெளிப்படையாக கேலி பேசினர்.தந்தையின் சொத்தை முழுக்க முழுக்க அனுபவிக்கும் எண்ணத்திலேயே வாழ்ந்தனர்.

பிளாபாயோ கல்யாணம் ஆகிப் போன இடம் மிகவும் நல்ல குடும்பம்.ஆனால் அவள் கணவனோ தீராத வ்யாதியால் இறந்தான். ஆன்மீக வாழ்க்கையே உறுதுணை என்று உணர்ந்த அவர் தன் பெற்றோரிடமே வந்து விட்டார்.

தினமும் பெண்களுக்கு உரிய வீட்டுக் கடமைகள் செய்வதும், தன் தந்தையின் ஸ்ரத்தை மிக்க சாளக்ராம மூர்த்திக்குப் பூஜை செய்வதில் பணிவிடையும், ஸ்ரீமத் வால்மீகி ராமாயணப் பாராயணமும் உணவும் ஆன்மீக பஜனையும் இவரது வாழ்க்கை ஆயின.இவரது ஆன்மீக ஒழுக்கம் ஊராரை மதிக்கச் செய்தது.

சஹோதரர்களுக்கு அப்படி ஒன்றும் இவர் மீது அன்போ கருணையோ இல்லை.வீட்டில் இருக்கும் விதவை வேலையாள் போலத்தான் எண்ணினர்.அவர்களின் குடும்பங்களும் இவரை அப்படியே கருதின.பிளாபாய் அதை எல்லாம் பொருட்படுத்தவே இல்லை.தனது உற்ற ஜீவதுணை இறைவனே என்று ஆன்மீகப் பயிற்சிகள் செய்தார்.

தாயார் இறக்க, தந்தையாரும் இறக்க, பிளாபாய் தனிமைக்குத் தள்ளப்பட்டார்.அண்ணன்கள் இருவரும் அப்பாவின் சொத்துக்களைச் சரிபாதி எடுத்துக் கொண்டு இவரை அனாதை விடுதியில் விட்டுவிட்டனர்.அவர் அதைப் பற்றியும் கவலைப் படவில்லை.தன் தந்தை மூலம் தனக்கு இவ்வாழ்வில் கிடைத்த மிக உயர்ந்த ஆன்மீகச் செல்வத்தைக் குறையாமல் விழிப்புணர்வில் சேமித்தும் அபிவ்ருத்தியும் செய்து வந்தார்.

தன் அப்பாவின் பூஜா மூர்த்தியான சாளக்ராம ஸ்ரீராமர் மட்டும் தன்னிடம் இருந்தால் பரவாயில்லை என்ற எண்ணம் பிளாபாய்க்கு ஏற்பட்டது.எனவே ஒரு

அன்பர் மூலம் கடிதம் ஒன்று எழுதித் தன் அண்ணன்களிடம் அளிக்கச் செய்தார்."அப்பா-அம்மாவின் பழைய சாமானங்களை எறிந்து விட்டோம்!" என்று பதில் மடல் வர அவருள் ஒரு வைராக்யம் வந்தது.

"ஹே ராமா! கேவலம் என் அப்பா தேடிய அழியும் சொத்துக்கள் அனைத்தும் அண்ணன்கள் வைத்துள்ளனர்.அழியாத பரம சத்யமான உன் சாளக்ராம வடிவம் எங்கோ போய் விட்டது.மீண்டும் அடியாளிடம் தேவரீர் எழுந்தருள வேண்டும், இல்லையேல் உயிர் விடுவேன்!" என்று அவர் உண்ணா வ்ரதம் மேற்கொண்டார்.

அவரது வ்ரதத்தின் மூலம் மெய்யுணர்வில் ஸ்ரீசாளக்ராம மூர்த்தி தோன்றி அவரது அறைக்குள் வ'ன்து அவரது மடியில் விழுந்தது.இதை உணர்ந்த பலர் பிளா பாயின் பக்தியைக் கொண்டாடினர்.ஒரு கட்டத்தில் அயோத்யா முழுக்க இவர் பஜனை செய்து வீதிகளில் நடந்து ஸ்ரீராம நாமத்தைப் பரப்பினார்.

இவரது தூய வாழ்வின் மஹத்துவத்தை உணர்ந்த சஹோதரர்களும் இவரை மனம் உவந்து ஏற்றுக்கொண்டனர்.அவருக்கு உரிய ஆன்மீக வாழ்வை வாழ வழி செய்தனர்.

நல்ல பெற்றோர் போட்ட விதை எதுவும் வீணாகாது!

ஹரி ஓம்!